# ஜீவா முழக்கம் - சிறப்புமலர்

1997




இந்திய சுதந்திர தினப் பொன் விழாவை முன்னிட்டு ' ஜீவா முழக்கம் ' வார இதழ் சார்பில் 1997 ஆம் ஆண்டு ஓர் சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. அம்மலரைத் தொகுக்கும் பொறுப்பும் தயாரிக்கும் பணியும் த. ஸ்டாலின் குணசேகரன் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

இம்மலரைத் தொகுக்கும் பணி ஆறுமாத காலம் நடைபெற்றது. கான்பூருக்கு நேரில் சென்று நேதாஜியின் மகளிர் பிரிவின் போர்ப்படைத் தளபதியாக விளங்கிய கேப்டன் லட்சுமி அவர்களையும் மதுரை தியாகி

ஐ. மாயாண்டிபாரதி அவர்களையும் சந்தித்து அவர்களிடம் தான் எடுத்த பேட்டியை இந்நூலில் இடம்பெற வைத்துள்ளார் தொகுப்பாசிரியர்.

400 பக்கங்கள் கொண்ட இம்மலரில் ஏராளமான அரிய புகைப்படங்களும் தனிச்சிறப்புமிக்க ஆய்வுக் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

சுதந்திர தினப் பொன்விழாவின்போது தமிழில் வெளியான மலர்களிலேயே உருவத்திலும் உள்ளடக்கத்திலும் மிகச்சிறந்த மலராக இம்மலர் பலராலும் மதிப்பிடப்பட்டது. இம்மலர் வெளியீட்டு விழா எழுச்சிகரமான மாநாடுபோல் ஈரோட்டில் நடத்தப்பட்டது. அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்கள் இம்மலரை வெளியிட தியாகி ஐ. மாயாண்டிபாரதி அவர்கள் முதல்பிரதியைப் பெற்றுக் கொண்டார். ‘ ஜீவா முழக்கம் ’ இதழாசிரியர் தா. பாண்டியன் வெளியீட்டு விழாவிற்குத் தலைமையேற்றார்.

இம்மலருக்கு அன்றைய குடியரசுத் தலைவர் மேதகு ஆர். கே. நாராயணன் அவர்களும் தென்னாப்பிரிக்காவின் அன்றைய குடியரசுத் தலைவர் மேதகு நெல்சன் மண்டேலா அவர்களும் வாழ்த்துரை வழங்கியுள்ளனர்.